**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.89/2016</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பில் இரண்டாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரவீன்குமார் | தந்தை பெயர் | : | பழனிவேலு |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 06.03.2026

**P.W. : 2**

**<u>வாதி தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் 3 ஆம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் B.E., MBA படித்துள்ளேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்திற்கான விபரங்களை நான்தான் சொன்னேன். வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும் என்பது பற்றி முதல்விசாரணையில் பத்தி 2 ல் சொல்லியுள்ளது சரிதான். இந்த வழக்கில் உடன்படிக்கை ஏற்பட்டது முதல் இன்றுவரை உள்ள எல்லா சங்கதிகளும் எனக்கு தெரியும். எனது அப்பா மாவட்ட வன பாதுகாவலர் (DFO) என்ற பதவியிலிருந்தார். என் அப்பா 2010 ல் பணி ஓய்வு பெற்றார். இறுதியாக தருமபுரி மாவட்டத்தில் பணி ஓய்வு பெற்றார். என் அப்பா திருச்சியில் எந்த சமயத்திலும் பணியாற்றவில்லை. சாட்சி தாமாக கூறுகிறார்– என் அப்பா திருச்சியில் படித்தார். அதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 12.04.2013 கிரைய உடன்படிக்கை ஏற்பட்டபோது நானும் எனது அப்பாவுடன் இருந்தேன். அந்த உடன்படிக்கையில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை. வாசாஆ.2 ல் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்று தெரியாது. என் அப்பா அரசு ஊழியர் என்பதால் வருமானவரி கணக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வருமானவரி கணக்கில் தாவா கிரைய உடன்படிக்கை பற்றி சொல்லப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வருமானவரி கணக்கை தாக்கல் செய்தால் இந்த உடன்படிக்கை பற்றிய விபரம் சொல்லப்பட்டுள்ளதா என்று தெரியும் என்றால் சரிதான். அந்த வருமானவரி கணக்கை என்னால் தாக்கல் செய்ய முடியும். திருச்சி கேகேநகரை சேர்ந்த ராஜேந்திரன் என்பவரை எனது அப்பாவிற்கு தெரியுமா என்றால் அந்த விபரம் எனக்கு

தெரியாது. மேற்படி ராஜேந்திரன் என் அப்பாவிற்கு நன்கு பழக்கமானவர் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ,2 கிரைய உடன்படிக்கையில் உள்ள எல்லா ஷரத்துக்களை பற்றியும் எனக்கு தெரியும். வாசாஆ.2 ல் மொத்த கிரைய தொகை 16 இலட்சம் என்றும், பாக்கி ஒரு இலட்சம் மட்டும் கொடுக்க வேண்டியுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பா அந்த 15 இலட்சத்தை எவ்வாறு கொடுத்தார் என்றால், என் அப்பா 2010 ல் பணி ஓய்வு பெற்றார், அதில் அந்த தொகையைக் கொண்டு 15 இலட்சத்தை ரொக்கமாக கொடுத்தார். அந்த தொகை வங்கி கணக்கிலிருந்து எடுத்து தரப்பட்டதா என்றால் அது தெரியாது. என் அப்பா அரசு ஊழியர் என்பதாலும், நான் படித்த நபர் என்பதாலும் ரூ.20000/- த்திற்கு மேற்பட்ட தொகையை ரொக்கமாக கொடுக்கக்கூடாது என்பதும், வங்கி மூலம் தான் கொடுக்க வேண்டும் என்பதும் தெரியும் என்றால் சரிதான். 12.04.2013 அன்று கிரைய உடன்படிக்கை எழுதி வாங்கிய பின்பு வேறு ஆவணம் வாங்கப்பட்டதா என்றால் அசல் ஆவணம் ஒன்றை பிரதிவாதி கொடுத்தார். அது என்ன ஆவணம் என்று ஞாபகமில்லை. அன்று நான் எனது அப்பாவுடன்தான் இருந்தேன். வாசாஆ 1 தான் அன்று பிரதிவாதி என் தந்தையிடம் கொடுத்தாரா என்றால் நீண்ட நாள் ஆனதால் சரியாக ஞாபகமில்லை. வாசாஆ.1 ஆவணத்தை வாசாஆ 2 தேதியில் பிரதிவாதி என் அப்பாவிடம் கொடுத்திருந்தால் அதை வாசாஆ.2 லேயே காட்டியிருப்போம் என்றால் அந்த விபரம் எனக்கு ஞாபகமில்லை. வாசாஆ.2 ல் வாசாஆ.1

ஆவணத்தை கொடுத்ததாக வாசகம் உள்ளதா என்றால் இல்லை (சாட்சி ஆவணத்தைப் பார்த்துவிட்டு கூறுகிறார்). வாசாஆ,1 ஆவணம் எப்போது என் அப்பாவிடம் வந்தது என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை.

**(வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.